உ
சிவமயம்.

# "துறவி"

1954.

| செய மலர் 1 | திங்கள் வெளியீடு. | தை-மாசி இதழ் 1-2 |
|---|---|---|

துறவி

## தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கம்,
திருவண்ணாமலை.

"பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

பதிப்பாளர்:
சுவாமி சொரூபானந்தா

ஆண்டுக் கட்டணம் ரூ 2/- தனி இதழ் அணா 3/-

ஓம்:

# பொருளடக்கம்.

எண் ........................................ பக்கம்.



★

## வேண்டுகோள்.

எல்லாம்வல்ல இறைவன்திருவருளால் "துறவி" என்னும் திங்கள் வெளியீடு இற்றைக்கு ஒன்பதாண்டுகட்கு முன்னே திருவருணையிலே சிவஞானச் செல்வர்களாகிய துறவிப் பெரியார்களும் இல்லற அன்பர்களும் கூடி தங்கள் சீரிய சிந்தனையில் ஆய்ந்து அமைத்த தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கத்தின் சார்பில் வேதாந்தம். சித்தாந்தம் முதலிய சாத்திரக் கருத்துக்களையும், பிறமதக் கருத்துக் களையும் தன்னுள்ளடக்கி செய ஆண்டு தைத்திங்கள் முதல் வெளிவருகின்றது.

இத் "துறவி" வெளியீடு சென்ற விஜய ஆவணி முதல் ஆரம்பித்து இடையே சிலதிங்கள் நின்று விட்டது. மீண்டும் அவ்வெளியீட்டை வெளியிட வேண்டுமென்று 7-12-54-ல் நடைபெற்ற சங்க பத்தாவது மாநாட்டில் 'துறவி' என்ற திங்களிதழை பதிப்பாளனாக இருந்து வெளியிடுமாறு அடியேனை பணித் தன்னார்கள். பதிப்பாளர் பதவிக்கு உரிய பண்பாடமையப் பெறாதவனாயினும் பொதுநலப்பணி யென்ற ஒன்றையே கருதி துறவிகளின் ஆசியையும் இறைவன் திருவருளையும் துணையாகக் கொண்டு வெளியிட முன்வந்தனன். சில ஏதுக்களால் தைமுதலில் இதழ் வெளிவர இயலவில்லை. யாதலின் தைத்திங்கள் இதழும், மாசி இதழோடு வெளிவருகின்றன. இனி ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் வாரத்தில் வெளிவரும். ஆகவே துறவிகளும் இல்லற அன்பர்களும் அன்பும் ஆதரவும் காட்டி இத் "துறவி"க் குழந்தையை வளர்க்குமாறு எல்லாம்வல்ல இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றேன்.


**சுவாமி சொருபானந்தா,**

பதிப்பாளர்,

கீழ்ப்பாலூர் அஞ்சல், கலசபாக்கம். (வழி)

போளூர் வட்டம். (வடாற்காடு.)

உ
சிவமயம்.

## கடவுள் வாழ்த்து.

அல்லல்போம் வல்வினைபோம் அன்னையிற்றில் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்—நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்துள் வீற்றிருக்கும்
கணபதியைக் கைதொழுதக் கால்.

தோடுடையசெவி யன்விடை யேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுர மேவிய பெம்மானிவனன்றே.

—சம்பந்தர் தேவாரம்.

நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்று
மலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்று
மாரூரா வென்றென்றே யலறா நில்லே. —அப்பர்.

பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட் சுடரொப்பாய்
மண்ணிடை யடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே. —சுந்தரர்.

நாயிற்கடையா நாயேனை நயந்துநீயே யாட்கொண்டாய்
மாயப்பிறவி யுன்வசமே வைத்திட்டிருக்கு மதுவன்றி
யாயக்கடவே னானோதா னென்னதோவிங் கதிகாரந்
காயத்திடுவா யுன்னுடைய கழற்கீழ்வைப்பாய் கண்ணுதலே.

—மாணிக்க வாசகர்.

தூயதமிழ் நாட்டுத் துறவிகள் சங்கமென்றும்
ஞாயிறுபோன் மக்களுக்கு நன்மைசெய—தாயாகும்
உண்ணா முலையாம் உமைசே ரொளிப்பிழம்பாம்
அண்ணா மலைதுணையா மால்.

## வாழ்த்து.

அந்தண ரென்னும் அறவோர் அநுபவத்தை
இந்த வுலகோர்க் கெடுத்துரைக்க—வந்த
துறவி வெளியீடும் தூயதமிழ் நாடும்
துறவறமும் வாழிய மாதோ.

# "துறவி"

## இறைவன்

உலகம், நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் சூரியன் சந்திரன் உயிர் (ஆன்மா) என்னும் எண்வகைப்படும். இறைவன் இவ்வெண் வகைப் பொருள்களிலே கலந்து ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்பர். இவைகளைப் படைத்துக்காத்து அழிப்பவர் சிவபெருமானே யாம். அப்பெருமான் அக்கினிக்குச் சூடுபோல தன்னின் வேறல்லாத தமது (ஆற்றல்) சத்தியைக்கொண்டு உயிர்களுக்கு அநாதியாய செம்பிற்குக் களிம்பு போன்ற ஆணவமலத்தை நீக்குவதற்கு மாயா காரியமாகிய உடம்பு ஐம்பொறி ஐம்புலன் மனம் முதலிய கரணங்கள் உலகம் அவற்றில் பலவகைப் பட்டபோக போக்கியங்கள் முதலிய வைகளைக் கொடுத்து உயிர்கள் கன்மவசத்தால் பிறத்தல் இறத்தல் களைச் செய்யும் வண்ணம் பெருமான் தலைவராய் நிற்பர். இங்ஙனம் இறைவன் ஆணையால் உயிர்கள் தாம் தாம் செய்த வினைக்கு ஏற்ற அளவில் இன்ப துன்பங்களைப் பொருந்தி அநுபவிக்கின்றன. அவ்வாறு அநுபவிக்கும்போது உயிர்கள் அறியாமற் செய்யும் நற் செயல்களாகிய புண்ணியச் செயல்கள் அவற்றினும் மேலாய அறிந்து செய்யும் புண்ணியச் செயல்களாகிய கொல்லாமை, புலாலுண்ணாமை இரக்கம், வாய்மை முதலிய செயல்களைச் செய்யுமாறு தூண்ட அதனால் தமக்கு வரும் இன்ப துன்பங்கள் ஒரு தலைவனாலேயே வருகின்றன. நமது முயற்சியினாலே வருவனவல்ல வருமாயின் நமது விருப்பத்துக்குரிய இன்பமேவந்து நம்மைப் பொருந்த வேண்டும். அவ்வின்பத்துக்கு மாறாக துன்பமும் வந்து நம்மைப் பொருந்தமாட் டாது. அங்ஙனம் வந்து பொருந்தும் துன்பத்தை நம்மால் விலக்கிக் கொள்ளவும் இயலாது அத்தகைய இன்ப துன்பமும் எல்லோரையும் ஒரே தன்மையாய் வந்து பொருந்தவுமில்லை, இவ்வாறே உடம்பும் இளமையும், செல்வமும் இவற்றால் வருமின்பமும் நம்மிடம் நிலைத்து நிற்பதுமில்லை கன்மங்களோ சடம் ஆதலால் அவையும் இங்ஙனம் வந்து பொருந்தமாட்டா. ஆகவே அவரவர் வினையை நாடி அதற் கேற்ற பலனை இன்பவடிவினனாகிய இறைவனே கூட்டுவிப்பர். இங்ஙனம் எல்லாம்வல்ல இறைவனே உலகத்துக்கும் உயிர்கட்கும் தலைவன் என உணரவேண்டும். அவ்வாறு உணர்ந்த போது யான் எனதென்கிற ஆணவச் செருக்கொழியும் அவ்வாறு உணராதபோது எத்தன்மையன வாய தவத்தான் சாலச் சிறந்தோராயினும் ஆணவச் செருக்கொழியாது. ஆகவே நாம் இதனால் தெரிந்துகொள்ள வேண்டியது தென்னை எனின்? - இறைவன் ஒருவன் உளன் என்றும் அவர் சிவ பெருமானே என்றும் உணர்தல் வேண்டும்:

(தொடரும்)

# சிவஞான போதம்.

திருநீ. சண்முகானந்த சுவாமிகள்,
(பிரமானந்த சுவாமிகள் மடம், மதுரை.)

வேதம் பசுவதன்பால் மெய்யா கமநால்வ
ரோதுந் தமிழதனி னுள்ளுறுநெய்—போதமிகு
நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெ மெய்கண்டான்
செய்யதமிழ் நூலின் றிறம்.

அகண்டாகார நித்திய வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் தாம் ஒரு நாமம் ஒருருவமொன்று மிலராயினும் ஆன்மாக்களிடம் வைத்துள்ள கைம்மாறு வேண்டாக் கருணையாலே ஆயிரந்திருநாம முதலியவற்றை யுடையாராய்ச் சதாசிவமூர்த்தியாய் நின்று தற்புருட முதலிய நான்கு முகங்களினால் இருக்கு முதலிய வேத நான்கினையும் ஈசானமாகிய வுச்சி முகத்தினால் காமிக முதலிய இருபத்தெட்டுச் சிவாகமங்களையும் சிருட்டியின் ஆரம்ப காலத்தில் தோன்றும்படி செய்தருளினார். வேதம் என்னுஞ் சொல் பதி பசு பாசமென்னும் முப்பொருள்களையும் அறிதற்குக் கருவியாகவுள்ள தெனப்பொருள்படும். ஆகமம் என்னும் சொல்லில் ஆ என்பது பாசம் எனவும், க என்பது பசுயெனவும் ம என்பது பதியெனவும் பொருள்படும். எனவே ஆகமம் என்பது முப்பொருளிலக்கணத்தை யுணர்த்தும் நூலென்பதாயிற்று இன்னும் ஆ என்பதற்குச் சிவ ஞானம் எனவும் க என்பதற்கு வீடுபேறெனவும், ம என்பதற்கு மல நீக்கம் எனவும் பொருள்கொண்டு ஆன்மாக்களுக்கு மலத்தை நீக்கிச் சிவஞானத்தை யுதிப்பித்து வீடுபேற்றை யளிக்கும் நூல் எனக் கொள்ளுதலுமொன்று.

அவ் வேதாகமங்கள் சூத்திரமும் பாடியமும் போறலின் ஒரு பொருளனவய் முறையே பொதுநூலும் சிறப்புநூலும் எனப் பெயர் பெறுமென்பது நீலகண்ட சிவாசாரியார் தாமியற்றிய பாடியத் துட்பதியதிகாரணத்திலே "யாம் வேதசிவாகமங்கட்குப் பேதங்காண் கின்றிலம், வேதமும் சிவாகமமாம்" எனக் கூறிப் போந்ததனால் நனகு தெளியக் கிடந்தது இக்கருத்துப்பற்றியே

"வேதமோ டாகம மெய்யா மிறைவனூ
லோதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே"

எனத் திருமூல நாயனார் திருவாய் மலர்ந்தருளியதாம் எங்க.

இனிச் சிவஞான போத வரலாறு என்னை எனிற் கூறுதும் சிவபிரான் ஆகமங்களிருபத்தெட்டினையும் வித்தியேசர் எண்மரில் முதல்வராகிய அனந்த தேவர்க்கருளிச் செய்ய அவற்றை அவ்வனந்த தேவர் நூற்றுப்பதினெட்டு உருத்திரரின் முதல்வராகிய சிகண்ட ருத்திரருக்கருளிச் செய்ய அவர் நந்தியெம் பெருமானுக்கருளிச் செய்தனர். அவற்றைக் கேட்ட நந்தியெம்பெருமான் சிகண்ட தேவரை வணங்கி நின்று "சிவாகமங் கடோறும் சரியை முதலிய நாற்பாதங்களும் சிறுபான்மை வெவ்வேறுகக் கூறப்பட்டன. அவற்றுள் உண்மையிதுவென வருளுதல் வேண்டும்" என விண்ணப்பித்து வினைய வழிச் சிகண்டர் கருணை கூர்ந்து "நன்றே கடாயினுய் கூறுதும் கேட்பாயாக கற்பங்கள் தோறும் சிருட்டி மாறுபாடும் கேட்கும் அதிகாரிகளின் உளத்தின் மாறுபாடும் பற்றிச் சரியை முதலிய மூன்று பாதங்களும் வெவ்வேறுகக் கூறப்பெற்றனவாகலின் எவ்வெவ்வாகமத்தின் முறையே யார் யார் தீக்கை பெற்றனரோ அவ்வவ்வாகமத்தின் முறையே அவரவர் ஒழுகற்பாலர் அவையெல்லாந் துலாருந்தி நியாயங் கொண்டு கூறப்பட்டனவன்றி மாறுகோளல்ல வென்பதை யுணர்த்தும் பொருட்டு இரௌரவாகமத்திற் பன்னிரு சூத்திரத்தாற் "சிவஞானபோதம்" என்பதோர் படலங் கூறப்பட்டுளது. அதனைக் கேட்ட அதிகாரிகட்கு எல்லாவாகமப் பொருளும் மாறுகோளின்றி இனிது விளங்கும்" எனக்கூறி அச்சிவஞான போதத்தை நந்தியெம்பெருமானுக் கருளிச்செய்தார். அவர் அது கேட்டவளவிலே ஐயந்திரிவுகளகன்று மெய்ப்பொருள் தெளிந்து தம்மாணவரிற் சிறந்த சனற்குமாரமுனிகட்கருளிச் செய்ய அவர் சத்தியஞான தரிசனிகட்கருளிச் செய்ய அவர் பரஞ்சோதிமாமுனிகட்கருளிச் செய்ய அவர் மெய்கண்ட தேவர்பால் வந்து சிவஞான போதத்தைக் கொடுத்துத்தான்கேட்டவாறே வகுத்தருளிச் செய்து "இந்நூலை இவ்வுலகத்துள்ளார் உணர்ந்துய்தற் பொருட்டு மொழிபெயர்த்துப் பொழிப்புரைக்க" எனக் கூறி நீங்க அவரும் அவ்வாறே மொழி பெயர்த்துப் பொழிப்புரையுஞ் செய்து தம்முடைய மாணக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த அருணந்தி குரவர்க்கருளிச் செய்தனர் எனக்காண்க.

இச் சிவஞான போதத்தையே முதநூலாகக் கொண்டு திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானசித்தியார், இருபாவிருபஃது, உண்மை விளக்கம். சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்பநிராகரணம், எனப் பெயரிய பதின்மூன்று சாத்திரங்களுந் தோன்றின. இவை பதினான்குமே சைவ சித்தாந்த சாத்திரங்களென்றுயர்த்துக் கூறப்படுவன. இந்நூலுட் கூறப்படும் பன்னிரண்டு சூத்திரத்துள்ளே முதல் மூன்றும் பிரமாணவியலெனப் பெயர்பெற்று முறையே உலகிற்கு நிமித்த காரணமாகிய பதியின் உண்மையினையும், பாசனத்தின் உண்மை-

யினையும், பசுவின் உண்மையினையும் விளக்குவனவாம். அடுத்த மூன்றும் இலக்கணவியலெனப் பெயர்பெற்று முறையே பசுவிலக்கணத்தையும், பாசவிலக்கணத்தையும், பதியிலக்கணத்தையும் விளக்குவனவாம். அடுத்த மூன்றும் சாதனவியலெனப் பெயர்பெற்று முறையே சாதித்துப் பெறுதற்குரிய அதிகாரமுடையது இது என்பதையும், சிறந்த கருவியெனப்படும் சாதனம் இது என்பதையும், சாதகஞ்செய்யுமாறு இது என்பதையும் விளக்குவனவாம். இறுதி மூன்றும் பயனியலெனப் பெயர் பெற்று முறையே பெத்த நீக்கப் பயனையும், முத்திப்பயனையும் பெத்தநீக்கமும் முத்தியும் பெற்றார்க்குச் சீவன்முத்தி நிலைக்கண் நிகழும் இயல்பினையும் விளக்குவனவாம். பிரமாணவியலும் இலக்கணவியலும் பொதுவியலெனவும், சாதனவியலும் பயனியலும் சிறப்பியலெனவும் பெயர்பெறும். இவற்றை வடநூலார் முறையே தடத்தவிலக்கணமெனவும் சொரூபவிலக்கணமெனவுங்கூறுப. அளவை முகத்தானும் இலக்கணமுகத்தானும் கூறப்பட்டுக்கேட்டல் சிந்தித்தல் என்னுமிருவகையான் உணரப்படுவது தடத்தவிலக்கணமெனவும், சாதனமுகத்தானும் பயன்முகத்தானுங் கூறப்பட்டுக்கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை என்னும் நான்கு வகையானுணரப்படுவது சொரூபவிலக்கண மெனவுங் கண்டு கொள்க.

சிவஞானபோதம் இங்ஙனம் பொதுவியல்பும் சிறப்பியல்பும் ஒருங்குணர்த்தலின் முழுமுதல் நூலாம். சிவஞான சித்தியார் சிவப்பிரகாசம் என்பன முறையே இவ்விலக்கணம்பெற்ற வழிநூலும் புடைநூலுமாம். மற்றையும் இங்ஙனே ஓர்ந்துணர்ந்துகொள்க.

மேற்சிவஞானபோதப் பெயர்க்காரணம் என்னை எனிற், கூறுதும். திருவாதவூரர் பெருந்துறையிற் பரமாசாரிய மூர்த்தியாகிய சிவபிரானைச் சரணாகதியாக அடைந்தஞான்று "செங்கைமீது— பொருத்தமுறும் புத்தகமேதையா" என்று வினவ, அப்பிரானர் தம் அருமைத்திருவாக்கால் "பொய்மையிலாச் சிவஞான போதம்" என விடையிறுக்கவும், வாதவூரர் "சிவமேது ஞானமேது இங்கிலங்கியிடும் போதமேது" என்று வினவ, "நின்ற சிவமொன்றதனைத் தேர்தல் ஞானம் நிகழ்போதம் தேர்ந்ததனைத் தெளிதலாம்" என்று பிரானர் விடையிறுத்ததாக திருவாதவூரர் புராணத்தானறியக் கிடத்தலின், ஒன்றாகிய பரம்பொருளே சிவமென்றும், அதனை அனுபவமுறவுணர்தலே ஞானமென்றும், அறிவுருவாம் அப்பொருளிலே நிலைபெறுதலே போதமென்றும் பொருள்கொண்டு சைவாகமங்களின் பொருள் நிச்சயமுணர்த்துவது சிவஞானபோதமென அந்நூற்குக்காரணக்குறி வந்தவாறுணர்ந்து கொள்க,

"சரியைநற் கிரியை யோகந் தாமொரு மூன்றும் ஞானம் மருவுதற் கேது வென்று மறைபுகன் றுரைக்கும்" என்பவாகலின்

தலைமைபற்றி ஈண்டு ஞானபாதமே கொள்ளப்பட்டது. இந்நூல் பிறவிப்பிணியினைத் தீர்த்தற்குச் சிறந்த மருந்தாய்க்கொள்ளுதற்கும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாதப்பொருளையும் அறிவித்தலிற் சிவசங்கிதை யென்னும் பொதுப்பெயர் பெறுதற்கும் உரியதாம்.

திருநாரையூரில் எழுந்தருளியுள்ள பொல்லாப் பிள்ளையாரால் திருவாய்மலர்ந்தருளப்பட்ட சூர்ணியாகிய கருத்துரையாலும், மெய் கண்ட தேவநாயனாராலியற்றப்பெற்ற வார்த்திகமாகிய பொழிப் புரையாலும் பின்னர் பாண்டிப்பெருமாளென்னும் பெரியாராலாக்கப் பெற்றவுரையாலும், மாதவச்சிவஞானயோகிகளாலாக்கப் பெற்ற சிற்றுரையாலும் பேருரையாலுந் திகழ்வதாம். மற்றும் பதி, பசு, பாசமென்னும் முப்பொருளாகிய அபிதேயத்தோடு (பெயரிட்டு வழங் கப்படுவது) அபிதாயகமாகும் (பெயரிட்டு வழங்குவது) சம்பந்த முடைய தென்பதையும், மெய்ப்பொருள் ஞானத்தாற் சாதிக்கப்படும் தீக்கை முதலியவற்றை யுணர்த்தும் வழியானே சர்வதுக்க நிவர்த்திப் பரமானந்தப் பிராப்தி வடிவமாகிய வீடுபேற்றை பயனாகவுடைய தென்பதையும், முன்பு தீக்கை பெற்றுச் சிவாகமங்களை நல்லாசிரியர் பால் ஓதியுணர்ந்து அதன்பின் ஏனை மூன்று பாதங்களையாராய் இன்ற நூல்களை முறையே கேட்டுத்தெளிந்தவ்வாராய் நித்தியாநித்திய வுணர்வுதோன்றிப் பிறவிநோய்க்குப்பயந்து வீடுபேற்றின் மிக்கவாவு டைய அதிகாரிகளால் ஞானசாரியன்பாற் கேட்கப்படுந்தகுதியுடைத் தென்பதையும் அநுபந்த சதுட்டயமாகக் கண்டுகொள்க—தொடரும்.

## மானிடப் பிறவியின் அருமை.

**சுவாமி அருணகிரிநாதர்**
(த. நா. து. சங்க அமைப்பாளர்
குளப்பாக்கம், சென்னை.)

உலகின்கண் நால்வகைப் பிறப்பு எழுவகைத்தோற்றம் எண்பத்து நான்குநூறுயிரம் இனவேறுபாடுடன் காணப்படுகின்ற பிறவிகளுள் மக்கட் பிறவியே கிடைத்தற்கரிய மிகச்சிறந்த பிறவியாம்.

"பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்பதால் மானிடப் பிறவி எதனுல் அரிய சிறந்த பிறவியாம் எனில் விளக்குவாம்.

**நால்வகைப் பிறப்பாவன** 1 கருப்பையினுள்ளிருந்து பிறக்கின்ற மக்கள் மாக்கள் முதலிய உயிரிகள் (சராயுஜம்) 2 முட்டையினுள்ளிருந்து பிறக்கின்ற பறவை, பாம்பு, பல்லி, ஓணான் முதலிய உயிரிகள் (அண்டஜம்) 3 வெப்பத்தால் வியர்வை புழுக்கத்திடமாகப் பிறக்கும் பேன், ஈர், கொசு, புழு முதலிய உயிரிகள் (சுவேதஜம்) 4 விதையிடமாக மண்ணுள்ளிருந்து தோன்றும் புல், பூண்டு, செடி கொடி, மரங்கள், (உற்பீஜம்) ஆகிய இவைகளே நால்வகைப் பிறவி களாம், இவைகளில் கருப்பையினுள்ளிருந்து பிறக்கும் உயிர்களுக்கு காதுகள் வெளிப்படத் தோன்றும். முட்டையினுள்ளிருந்து வெடித்து வெளிப்படும் உயிரிகளுக்கு காதுகள் வெளிப்படத்தோன்ரு, இதுவே கருவினுள்ளும், முட்டையினுள்ளும் இருந்து பிறக்கும் உயிரிகளைக் காண்பதற்குச் சிறந்த அறிகுறியாம் (அடையாளம்)

**எழுவகைத் — தோற்றமாவன** உம்பர்வாழ்தேவர்கள், இம்பர்வாழ் மக்கள் விலங்குகள், பறவைகள் ஊர்வனவாகிய பாம்பு பல்லி எறும்புகள் முதலியன நீர்வாழும் மீன்முதலியன புல் மர முதலியன ஆகிய பிரிவுகள் ஏழும் எழுவகைத் தோற்றமாம்.

**எண்பத்து நான்கு நூருயிரம் இனவேறுபாட்டின் தொகைகள்** தேவர்கள் பதினுன்குலட்சம், மக்கள் ஒன்பது லட்சம், விலங்குகள் பத்துலட்சம், பறவைகள் ஊர்வன பதிஞென்றுலட்சம், நீர்வாழ்வன பத்து லட்சம், புல் மர முதலியன (தாவரம்) இருபது லட்சம், ஆக எண்பத்து நான்கு லட்சம் இன வேறுபாடு உடையன உலகத்தில் தோன்றிய உயிரிகள்.

இவைகளில் ஊறு (ஸ்பரிச) உணர்ச்சியாகிய ஒரறிவினை யுடையவை புல், மர முதலிய (தாவர) உயிரிகள். ஊறுணர்ச்சியும் சுவையும் (ரசம்) ஆகிய இரண்டறிவை யுடையவை நத்தை, இப்பி சங்கு, முதலிய உயிரிகள். ஊறு, சுவை, மணம் (கந்தம்) என்கின்ற மூன்றறிவை யுடையவை எறும்பினங்களாகிய உயிரிகள். ஊறு, சுவை மணம் உருவம் என்கின்ற நான்கறிவை யுடையவை தும்பி, வண்டுகள் முதலிய உயிரிகள். ஊறு, சுவை, மணம் உருவம் ஓசை என்கின்ற ஐந்தறி வினையுடையவை, பறவைகள், விலங்குகள், மனிதர்கள் ஆகிய உயிரிகளாம். எழுவகை யாகப்பிரிக்கப்பட்ட இவ்வுயிரினங்களை அறிவு செயல்களின் ஏற்றத்தாழ்வினுல் இரண்டு வகையாகவும் பிரிக்கலாம். அதாவது, புல், பூண்டு, செடி, கொடி மரம் முதலிய உயிரிகள் தன்னுடை உயிரிருப்பு வளர்ச்சி முதலியவைக்கு ஆதாரமாகிய நீரையும் மண் சாரத்தையும் தனது வேர்களின் மூலமாய் ஊறு (ஸ்பரிச) உணர்ச்சியால் ஈர்த்துத் தளிர்த்து வளர்ந்து கிளைத்து படர்ந்து ஓங்கிப் பருத்து பூத்து காய்த்து பழுத்து உதிர்த்தும் இருந்த விடத்திலேயே இருப்பதால் நிலையியற்பொருள் (அசரம்) ஆகிய ஒரு பிரிவும்.

நீரில் வாழும் மீனினங்கள் நெஞ்சால் நகர்ந்து ஊர்வன பறப்பன நடப்பனவாகிய விலங்குகள் மனிதர்கள் ஆகிய உயிரிகள் தத்தம் புலன்களைத் தத்தம் வாயிலாகச் செலுத்தியும் உணவாதி நுகர்வுக்காக ஓரிடத்திலிருந்து பலவிடங்களுக்குச் சென்றும் அறிவு ஆற்றல்களின் உயர்வு தாழ்வுக்குத் தக்கபடி ஆராய்ந்து தத்தமக்குத் தகுதி ஆயவற்றைத்தேடி எடுத்துக்கொண்டு வந்து வைத்து நுகர்ந்து வாழும் உயிரிகள் இயங்கியற்பொருள் (சரம்) ஆகிய மற்ரெரு பிரிவும்ஆம்.

இவ்விரு பிரிவுகளுள் முற்கூறிய நிலையியற் பொருள்களைவிட பிற்கூறிய இயங்கியற் பொருள்கள் உயர்ந்தவைகளாம். இயங்கியற் பொருள்களுள்ளும் மக்களல்லாத ஏனைய உயிர்கள் தத்தம் உடல-மைப்புக்குத்தக்கபடி அமைந்த பொறிபுலன்களைக் கொண்டு உயிர் வாழ்வுக்கு வேண்டிய உணவாதிகளைத் தேடிப்பிடித்துத் தின்றும் மென்றும் உண்டும் உறங்கியும் இச்சையெழுந்தால் மானமின்றி தம் மினத்தைப் பொலிந்தும் கருவடைந்தும் குட்டி, குஞ்சுகளை ஈன்றும் பால் கொடுத்து இரை கொடுத்தும், பல் முளைத்து இரக்கை முளைத் தானதும், முட்டியும் கடித்தும் கொத்தியும் விரட்டியும் விடும் தன் னுடைய குட்டி குஞ்சுகள் என்பதையும் நாளடைவில் அறவே மறந்து விடும். ஈன்ற தாயினையும் கூடி இன்புறும்இயற்கைத்தாதலின் தாழ்ந்த உயிரினங்களாம்.

மக்கட் பிறவியோவெனின் உண்பதற்கு அறுசுவையோடு கூடிய பலவகை உணவாதிகளையும் உண்டுபண்ணி பக்குவப்படுத்தி சமைத்து உண்டு சுவைத்தும், உடுப்பதற்குத்தகுந்த பலவித வண்ண பட்டாடைகளையும் நூலாடைகளையும் நெய்தும் உடுத்தும், அணிவதற் குத்தகுதியான நவரத்தினங்களால் இழைக்கப்பெற்ற பொன்னணி கலன்களைச்செய்து அணிந்தும், இருப்பதற்கும் வாழ்வதற்கும் தகுதி யாய மாடமாளிகைகளை அழகுற அமைத்தும். அதனுள் பள்ளியறை உண்டாக்கி உயர்ந்த மெல்லிய பஞ்சணையில் ஆணும் பெண்ணும் அரவணைத்தின்புறும் சிறப்பும், இச்செயல் செய்யத்தக்கது இச்செயல் செய்யத்தகாதது இப்பொருள் கொள்ளத்தக்கது இப்பொருள் தள்ளத் தக்கது தீவினை செய்தால் திமைவந்தடையும் நல்வினை செய்தால் நன்மை வந்தடையும் என்பனவெல்லாம் ஆராய்ந்து கண்டு பிடித்துக் கருவிகளைச் செய்து அதனுல் வினைசெய்வதற்குச் சிறந்த காரணமாகிய ஆருவது அறிவாகிய பகுத்தறிவையும் பெற்று இல்லறத்திருந்து நல்லறமாகிய பல்லறம் புரிந்தும் பரமனைத்தொழுதும் துறவறந்தாங்கி மாதவஞ்செய்தும் பிறவிப்பயனுகிய பேரின்ப வாழ்வைப்பெற வந்தது ஆதலால் மக்கட்பிறவியே சாலச்சிறந்த உயர்ந்த பிறவியாம்.

—தொடரும்.

# அறம்.

ஐயாறு அடிகள்,
(சித்தபாலைய தேசிகர் ஆதீனப்புலவர்
அடிவாரம், பழநி.)

விஜய-தை இதழ் 6-ல் 81-ம் பக்கத் தொடர்ச்சி.

இல்லறம் துறவறம் என்ற இரண்டனுள் இல்லறத்தினைப் பற்றி முதற்கண் தெரிந்த அளவு ஆராய்வாம் மக்கட் பிறப்பினைப் பெற்ற ஒவ்வொருவரும் இளமையிலேயே நல்லாசிரியர்பாற் சென்று அறநூல் பொருணூல்களைக் கற்று கற்றவைகளை நல்லோர் பலரிடம் சென்று ஐயந்திரிபறப்பயின்று அறிவெனும் திருவினைப்பெறுதல் வேண்டும். அறிவுடையவர்கள் தாம் எல்லாச் செல்வங்களையும் எய்தப் பெற்றவர்கள் ஆவார். அஃதில்லாதவர்கள் என்னுடையரேனும் இல்லாதவர்களே.

> "அறிவுடையா ரெல்லாமுடையா ரஃதிலார்
> என்னுடையரேனு மிலர்" —திருவள்ளுவர்

அறிவுடையான்தான் இல்லறமாம் நல்லறத்திற்கு உரியவனாவான். "இல்லறமல்லது நல்லறமன்று" ஔவையார். அறிவுடையான் நற்குண நற்செயல்கள் நிறையப்பெற்ற நங்கையை மணந்து மனையறத்தினை மேற்கொள்ளல் வேண்டும்

ஒரு தலைமகனும் தலைமகளும் பால்வரை தெய்வம் கூட்டக் கண்டு காதல் கொண்டு உள்ளமும் உணர்வும் உயிரும் ஒன்றுய்க் கலத்தல் வேண்டும். ஒரு தலைமகன் வீதியின் வழியாக நடந்து செல்கின்றான். தலைமகள்மேன் மாடத்திடை ஆண் அன்னங்களும் பெண் அன்னங்களும், விளையாடுமியல் பினைப்பார்த்து நிற்கின்றாள் தலைமகன் மேன்மாடத்திடை நிற்கும் தலைமகளைப் பார்த்தான் தலைமகளும் தலைமகனைப்பார்த்தாள் பார்த்த அளவிலே தலைமகளதழகினைத் தலைமகனும் தலைமகனது அழகினைத் தலைமகளும் அறிய இயலாமற்போயது, எனவே இருவரும் உணர்வு ஒன்றிடப் பார்த்தனர்.

> "எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழி
> கண்ணொடு கண்ணினை கவ்வி யொன்றையொன்
> றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
> அண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள். —கம்பன்

அந்தத் தலைமகன் தனது பார்வையாகிய கயிற்றால் கட்டி இழுத்துத் தலைமகளைத் தன் உள்ளத்திடை வைத்துக்கொண்டான். தலைமகளும் அங்ஙனமே செய்தாள். எனவே தலைமகனதுளத்திடைத் தலைமகளும் தலைமகளதுளத்திடைத் தலைமகனும் குடி புகுந்தனர்.

"பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்
தொருவரை யொருவர்தம் உள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினர், —கம்பன்.

இத்தகையோர் வாழ்வுதான் மாண்புள வாழ்வாகும் தலைமகனுடைய உள்ளமானது தன் காதலியல்லாத வேறொருத்தி தங்குவதற்கு இடம் கொடுக்குமேல் அவனது வாழ்வு மாண்புள வாழ்வு ஆகாது. அவன் பற்பல அல்லல்களுக்காளாவான். அவனது வாழ்நாட்கே இறுதி யாயினுமாகும்

மேன்மாடத்திலே நின்ற தலைமகளதுயிரும் வீதியிலே நடந்து சென்ற தலைமகனதுயிரும் ஒன்றுயது.

"மருங்கிலா நங்கையும் வசையிலையனும்
ஒருங்கிய இரண்டுடற் குயிரொன் றாயினர், —கம்பன்

இத்தகைய காதலர்கள்தான் இன்பவாழ்வினை யெய்துவார்கள் இன்ப வாழ்வினை எய்தவேண்டுமேல் இருவரும் கருத்தொருமித்து அறவினை களை நன்கனம் ஆற்றவேண்டும்.

"அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழும் இல" —திருக்குறள்.

மனை வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளினைப் பழிக்கு அஞ்சி அன்பும் அருளும் உடையராய்ச் சேர்க்க வேண்டும். தேடிய பொருளினை விருந்தினர் முதலானவர்கட்குப் பங்கிட்டுக் கொடுத்துத் தாமும் நுகர்தல் வேண்டும் இத்தகைய பண்பாளனுக்கு மனைவாழ் வின் நேர்மை ஒருபோதும் குறைவடையாது: மேன்மேலும் நிறை வடையும்.

மனைவாழ்க்கையானது அன்பும் அறமும் உடையதாய் உயர் வடைதல் வெண்டும். மனைவாழ்வினை நேரிய முறையில் ஒருவன் நடத்துவானுனல் அவன்வேறு நெறியிலேசென்று அடையத்தக்கதாக உள்ளது ஒன்றுமில்லை. எல்லா நன்மைகளும் இவனுக்கே உரியன.

ஒவ்வொருவரும் அறநெறியின் இயல்புடன் வாழ்தல் வேண்டும். அங்ஙனம் வாழ்பவர்கள் இல்லறநெறியல்லாத ஏனைய நெறிகளிற் சென்று முயலும் பலதிறத்தாரினும் மேன்மையாளர்களே.

மறவினையினையே மேற்கொள்பவர்கள் இழிந்தோரெவரினு மிழிந்தவர்களே, இல்லறத்தார்கள் ஏனையோரையும் அறநெறி நிற்கச் செய்வார்கள், தாமும் நெறி தவறுமல் வாழ்வார்கள். அறம் என்று சிறப்பித்து பேசப் பெறுவது இல்வாழ்க்கையே அவ்வில் வாழ்க்கை யும் ஏனையோர்கள் பழிப்பதற்குக் காரணமான குற்றம் இன்றி விளங்கல் வேண்டும், அங்ஙனம் விளங்குமேல் இல்லறமே நல்லறம

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தின்றாயின் நன்று" —குறள் (தொடரும்)

ஓம்:

ஓம் கம் கணபதயே நம:

ஓம் ஹ்ரீம் அன்னபூர்ணாயை நம:

ஓம் ஸ்ரீ ஸாது சற்குருப்யோ நம:

# யோக சிகோப நிஷத்–தமிழ் பொழிப்புரை.

திரிமூர்த்தி சுவாமிகள்,

(ஆனந்தாச்சிரமம், சென்னை.)

அறிவின்மிக்க அறவோர்களே!

உலகின்கண் மக்களாய்ப் பிறந்த அனைவர்களுக்கும் துன்ப ஒழிவும், இன்பவிழைவும், இயற்கையானமைந்த செயலேயாம். ஆயினும் அவ்விதச் செயலே, மக்களின் நலத்தையே கருதிய ஆன்றோர்கள் எளிய முறையில் வினாவிடையாக பிரமன்வினவ சிவபெருமான் விடை கூறும் வாயிலாக இந்த யோக சிகோப நிஷத்தை கிருஷ்ண யஜுர் வேதத்திலிருந்து பிரித்து எழுதி அமைத்தனர்.

இதைத் "துறவி" என்ற பத்திரிகையில் தமிழில் பொழிப்புரையாய் எழுதிவிடுத்தனன் இதை நன்கு கற்று அதனாலாம்பயனை அடைவீர்களாக.

அவதாரிகை - யஜுர்வேத சாந்தி மந்திரம்

ஓம் ஸஹநாவவது ஸஹநௌபுனக்து, ஸஹவீர்யம் கரவாவஹை

தேஜஸ்விநாவதீதமஸ்து, மாவித்விஷாவஹை ஓம் ஸாந்தி: ஸாந்தி: ஸாந்தி:

## பொழிப்புரை.

ஏ பிரணவவடிவஸர்வேஸ்வரா! குருசிஷ்யர்களாகிய எங்களைப் பிரிவின்றிக் காப்பீராக. எங்களிருவரையும் உண்ணும் வகையால் ஒன்றாகவே நுகரச் செய்வீராக அவ்வுண்டலால் நாங்கள் உடல் வலிமைபெற்றவர்கள் ஆவோமாக உடல் ஒளிபெற்ற நாங்கள் கல்வி கற்றவர்களாகட்டும் பகையற்றுக்கூடி வாழ்கின்றவராக ஆகட்டும் உடலினுறும் நோய், பிறவுயிர்களால் உறும் துன்பம் தேவதைகளால் உண்டாங்கோபம் ஒழிவனவாக

## முதலாவது அத்தியாயம்.

அவதாரிகை-முத்திவழி அறியும் விருப்பத்தை இரண்டு மந்திரங்கள் கூறுகின்றன

(பொ....ரை) ஏ ஒளிவடிவ சங்கர! எல்லா உயிர்களும் அறியாமை யாகிய வலையால் சூழப்பட்டவர்களாய், இன்ப துன்பங்களால் (வருந்து கின்றார்கள்) அவர்களுக்கு விடுதலை எவ்வாற்றானும், அருளால் கூறு வீராக! (மந்திரம் 1) மற்றும் அறியாமையாகிய வலையைக் கிழிப்பதும் பிறப்பு இறப்பு மூப்பு நோய் இவைகளை அழிப்பதும், எல்லாச்சித்தி களையும் செய்விப்பதும் இன்பத்தையே தருவதுமான வழியைக் கூறுவீராக (ம 2)

(அ....கை) முக்தி வழியின் அருமையைக் கூறுகின்றது

(பொ....ரை) இவ்வாறு பிரமன் கேட்க மகேஸ்வரன் விடைகூறினார் தாமரையில் தோன்றியவனே! தன்னில் வேறில்லாத மேலான (முக்தி) பதமானது பலவழிகளால் அடைதற்கு அரியது ஆனால் (ம-3) யோக சித்தியின் வழியால் பெறப்படுகின்றது; வேறு வழியால் ஆவதன்று

(அ ...கை (பிரமம்) வெறுங் கல்வியால் மட்டும் அடையத்தக்க தன்று எனக் கூறல்

(பொ....ரை) சாஸ்திரக் குப்பைகளில் வீழ்ந்தவர்கள் அந்தக் கல்வியறி வால் மயக்குற்றவர்கள் ஆனார்கள் (ம-4) களங்கமின்றியதும் தூய்மை யானதும், ஒழிவானதும், எல்லாவற்றையுங் கடந்ததும், நோயற்றது மான அந்தத் தனது ஒளிவடிவம் கல்வி சற்றலால் மட்டும் விளக்க முறுமா என்ன? (ம-5) கல்வினைத் தீவினைப்பயன்களால் சூழப்பெற்ற அந்த ஆன்மாவே ஜீவவுருக் கொண்டது (ம-6) தத்துவங்களைக் கடந்த அந்த அழிவற்ற பரம்பொருள் எவ்வாறு சிவனாக உள்ள நிலையைப் பெற்றது? பேரொளி வடிவ ஈஸ்வரா! கிருபையால் சொல்வீராக

(அ....கை) பிரமப்பொருள் ஜீவவுருக்கொள்ளும் நிலையைக்கூறுகின்றன

(பொ....ரை) எல்லாவிதமான உணர்வு எல்லையைக் கடந்ததும் அறிவுருவமானதும் குறியற்றதுமான பிரமம் (ம-7) காற்றுப்போன்று தோற்றமுள்ளதாயிற்று; தனது அந்த ஒளியில் நான் என்ற தடிப்பு வெளிப்பட்டது பின்னர் முக்குண வடிவானதும் நரம்புகளால் பிணைக்கப்பட்டதும் ஐம்பூத வடிவமுள்ளதுமான உருவம் உண்டாயிற்று (ம-8) (அதை) இன்ப துன்பங்களோடுகூடிய ஜீவவடிவ மாகக் கொள்ளுவாயாக மேற்கூறிய அந்த முறையால் நிர்க்குணவடிவ பரம்பொருளிடத்தில் ஜீவனென்ற பெயர் சொல்லப்பட்டது. (ம-9)

(தொடரும்)

ஓம்.
சிவமயம்.

## தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கம் பத்தாவது மாநாட்டின்

# நிகழ்ச்சியும், தீர்மானங்களும்.

நிகழும் செய ஆண்டு கார்த்திகைத் திங்கள் உஉ-ம் நாள் (7—12—54) செவ்வாய்க்கிழமை திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலினுள்ளமைந்த "சத்தி விலாச சபா மண்டபத்தில்" அருட்டிரு சாந்தானந்த அடிகளாரவர்கள் தலைமையில் தமிழ் நாட்டுத் துறவிகள் சங்க பத்தாவது மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டிற்குத் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் துறவிகள் பலரும் துறவிகளைப்போற்றும் ஏனைய பெரியோர்களும் வந்து குழுமியிருந்தார்கள். துறவிகள் திருக்கூட்ட ஊர்வலம் காலை 8-மணிக்கு சா. நா. சாதுக்கள் சத்திரத்திலிருந்து கோயில் யானை விருது கொடிகள் மேளவாத்தியம் முதலிய சிறப்புகளுடன் துறவிகள் தமிழ் மறை ஓதிவர மாடவீதியை வலமாக வந்து சத்திவிலாச சபா மண்டபத்துட் சென்று மாநாடு தொடங்கப்பெற்றது.

### மாநாட்டு நிகழ்ச்சிகள்.

அருட்டிரு சாது சிங்காரவேல் அடிகளார் தமிழ் மறை ஓதிக் கடவுள் வணக்கம் செய்தார்கள்.

திருவருணை முத்தமிழ் பெருஞ்சொற்கொண்டல் திருவாளர் புரிசை. சு. முருகேச முதலியாரவர்கள் துறவிகள் சங்கத்தின் நோக்கம் என்பது பற்றியும் துறவிகளின் பெருமையினையும் கூறித் திறப்புரை செய்தார்கள்.

பின்னர் தவத்திரு. குக. சதாசிவ அடிகளாரவர்கள் முன்மொழியவும் அருட்டிரு. சுவாமி அருணகிரிநாதரவர்கள் வழிமொழியவும் தலைவர் தவத்திரு. சாந்தானந்த அடிகளாரவர்கள் மாநாட்டிற்குத் தலைமை வகித்துத் தலைமையுரை யாற்றினார்கள்.

சங்கச் செயலாளரவர்களால் ஆண்டறிக்கை படிக்கப்பெற்றது.

# சொற்பொழிவுகள்.

அருட்டிரு குக. சதாசிவ அடிகளாரவர்கள் "கம்பன் கண்ட இராமன்" என்ற தலைப்பில் கம்பன் கவி நயத்தையும் இராமனது பெருமையினையும் மிக அழகாகவும் நயமாகவும் பேசினார்கள். தவத்திரு சுவாமி அருணகிரி நாதரவர்கள் "கடவுள் நிலை" என்னும் பொருள் பற்றி நாத்திகர்களின் கொள்கையை மறுத்து கடவுட்டன்மையை விளக்கியும் சிறப்பாக ஓம் என்ற பிரணவத்தின் உண்மைப்பொருளைப் பலரும் எளிதில் உணருமாறு கூறியும் மக்களிடையே கடவுள் நம்பிக்கையும் நல்லொழுக்கமும் சமயப்பற்றும் நிலைபெற பற்றற்ற துறவிகளாற்றான் பணியாற்ற முடியுமென்றும் அதற்கு வேண்டிய உலகியலுதவிகளை இல்லறத்திலுள்ள அன்பர்கள் செய்துதர முன்வர வேண்டுமென்றும் இதனால் நாடு திருந்துமென்றும் இன்னும் பலவும் பல எடுத்துக்காட்டுடன் விளக்கி மிக அழகாகச் சொற்பொழிவாற்றினார்கள்.

சிவத்திரு சே. பெருமாள் சுவாமிகளவர்கள் "பாரதசாரம்" என்ற தலைப்பில் பாரதநாட்டுப் பாடல்களில் உள்ள மறை பொருள்களையெல்லாம் எடுத்து விளக்கியும் அப்பாடல்களைப் பாடியும் இவ்வுயரிய பாடல்களையெல்லாம் தள்ளிவிடாமல் பயன் படக் கூடிய நிலையில் மக்கள் எடுத்துக்கையாள வேண்டுமென்றும் பாரத நாட்டின் பெருமையினையுங் கூறி விரிவுரை நிகழ்த்தினார்கள்.

அருட்டிரு சுவாமி பிரகாசானந்தா அவர்கள் "கீதாச்சாரம்" என்னும் பொருள்பற்றி அத்துவித நிலையை மக்களின் மனதில் நன்கு பதியும் வண்ணம் எடுத்துக்கூறி அரியதோர் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

திருவாளர் பொன் சண்முக முதலியாரவர்கள் "திருக்குறள்" என்ற தலைப்பில் திருக்குறளின் பெருமையினையும் திருவள்ளுவரின் அரிய கருத்துக்களையும் பல எடுத்துக் காட்டுடன் விளக்கி அழகாகப் பேசினார்கள்.

சிதம்பரம் திருவாளர் N. தண்டபாணிப் பிள்ளை அவர்கள் "துறவிகள் சங்கம்" என்னும் பொருள் பற்றி நாத்திகம் தாண்டவமாடும் இக்காலத்தே துறவிகள் சங்கம் மிக அவசியமென்றும் இல்லறத்திலுள்ள நாம் அனைவரும் சங்கத்திற்கு வணக்கமளித்து உறுதுணையாயிருக்க வேண்டுமென்றும் இதனால் நாடு திருந்துமென்றும் பல சான்றுகளையும் எடுத்துக் காட்டி இனிமையாகப் பேசி முடித்தார்கள்.

பின் தலைவரவர்கள் முடிவுரை கூறினார்கள். சென்ற மூன்றாவது மாநாட்டில் சீர்திருத்தி அமைக்கப்பெற்ற விதி முறைப் படி சங்கம் நடைபெற வேண்டுமென (ஷ்டி விதிமுறைகளைப் படிக் கப்பட்டு) மாநாடு ஒருமனதாக தீர்மானித்தது. பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் மாநாட்டினரால் ஒப்புக்கொள்ளப்பட்டு நிறைவேறின. நன்றி கூறியதோடு மாநாடு இனிதே நிறைவெய்தியது.

## குறிப்பு :—

பத்தாவது மாநாடு குறித்த முன்னறிவிப்புச்சொற்பொழிவுகள் 4—12—54-முதல் 6—12—54-வரை காலை மணி 9-முதல் 12-வரை அருணை சத்தி விலாச சபா மண்டபத்தில் நிகழ்ந்தன.

**முதல் நாள் :—**

கடவுள் வழிபாடும் தமிழ் மறை ஓதலும் நிகழ்ந்த பின் தவத்திரு சோ. பெருமாள் சுவாமிகளவர்கள் தலைமையின் கீழ் **"திருப்பள்ளியெழுச்சி" "வந்தியன்பும்-நந்தியருளும்" "அந்தம் ஆதி"** என்னும் பொருள்பற்றி முறையே திருவருணை தமிழாசிரியர் திருவாளர். ரா. சிவானந்தம் அவர்கள், காஞ்சிபுரம் அருட்டிரு பொன் குமாரசுவாமி அடிகளாரவர்கள், திருவாளர் பொன். சண்முக முதலியாரவர்கள் ஆகிய இவர்கள் எடுத்துக்கொண்ட பொருளை இனிது விளக்கி மிக அழகாகவும் திறம்படவும் பேசினார்கள்.

**இரண்டாம் நாள் :—**

ஞாயிறு காலை 9-மணிக்கு கடவுள் வழிபாட்டிற்குப் பின் தவத்திரு. சுவாமி அருணகிரிநாதரவர்கள் தலைமையில் **"வள்ளலார்" "திருவாசகம்" "திருவாசகத்தேன்"** என்ற தலைப்பில் சித்தூர் தவத்திரு சாந்தானந்த அடிகளார் அவர்கள், போளூர் தமிழாசிரியர் அருட்டிரு ஆத்மானந்த அடிகளாரவர்கள். சென்னை செம்மனச் செல்வி சிவத்திரு காஞ்சனமாலை அம்மையாரவர்கள் ஆகிய இவர்கள் பல எடுத்துக் காட்டுடன் இனிமையாகவும் உருக்கமாகவும் சொற்பொழிவாற்றினர் கள் தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் முடிவுற்றது.

**மூன்றும் நாள் :—**

திங்கள் காலை 9-மணிக்கு கடவுள் வணக்கமும் தமிழ் மறை ஓதலும் நிகழ்ந்த பின் சங்கேந்தி தவத்திரு குக. சதாசிவ அடி களாரவர்கள் தலைமையின் கீழ் **"அறம் வளர்த்த அப்பூதி"** என்ற தலைப்பில் திருவருணை தமிழறிஞர் திருவாளர் அ. சாமிநாத முதலி யாரவர்களும், **"திருக்குறள்"** என்னும் பொருள்பற்றி சேலம் தமிழ் ஆசிரியர் திருவாளர் நடேச உடையாரவர்களும், **"பக்தி"** என்ற தலைப்பில் தவத்திரு சுவாமி ஆனந்தர் அவர்களும் அமைதியாகவும் நுண்ணிய கருத்துக்களை எடுத்து விளக்கியும் அழகாகவும் பேசினர் கள், தலைவர் முடிவுரைக்குப்பின் முன்னறிவிப்புச் சொற்பொழிவின் மூன்றும் நாள் கூட்டம் முடிவுற்றது.

## தீர்மானங்கள்.

நந்தண்டமிழ் நாட்டில் சிறந்தோங்கியிருக்கும் மிகப்புராதன கோயில்களையும் அக்கோயில்களிலுள்ள தெய்வ உருவங்களையும் நாத்திகர்களாயிருப்பவர்களிற் பலர் இடிப்பதென்றும் உடைப்பதென்றும் பிரசாரம் செய்து வருகிறார்கள். நம் தமிழ்த்தெய்வங்களின் திருவிழாக்காலங்களிலும் வரும் ஆத்திகர்களிடையே நாத்திகப் பிரசாரமும் செய்கிறார்கள். அவ்வாறு செய்யாமலிருக்க உத்திரவு விடுவிக்கும்படி அரசாங்கத்தாரை இச்சங்கம் கேட்டுக்கொள்கின்றது.

நாடகங்கள் மூலமாய் நம் சாத்திரங்களையும், சரித்திரங்களையும் இழிவு படுத்தும் முறைமையையும் அரசாங்கத்தார் வெகு விரைவில் சட்டத்தின் மூலம் அவ்விதம் நடத்தாமலிருக்க தடுக்க வேண்டுமெனவும் இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

பிறமதத்தவர்கள் (முக்கியமாய் கிருத்துவர்கள்) தமிழ்நாட்டில் திருவிழாக் காலங்களில் ஆங்காங்கு சென்று தமிழர்களையும தமிழ்த் தெய்வங்களையும் இழிவுபடப்பேசி தங்கள் மதங்களில் சேரும்படியாக பிரசாரம் செய்கிறார்கள். அவ்விதம் செய்வதையும் அரசாங்கத்தார் தடுக்க வேண்டுமென்றும் இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

"துறவி" என்னும் திங்கள் வெளியீட்டை தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கத்தின் சார்பில் சென்ற விசய ஆண்டு ஆவணித் திங்களில் தவத்திரு சுவாமி ஞானானந்தா அவர்கள் பதிப்பாளராக இருந்து துவக்கி நடத்தி வந்தார்கள். அவர்கட்கு உடல் நலக்குறைவால் திங்கள் வெளியீட்டை ஆறு திங்கட்குப்பின் நிறுத்த வேண்டி நேர்ந்தது. அத்திங்கள் வெளியீட்டை செயஆண்டு தைத்திங்கள் முதல் தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கச்செயலாளர் சுவாமி சொரூபானந்தா அவர்களைப் பதிப்பாளராக இருந்து நடத்தும்படிக்கு இச் சங்கம் தீர்மானிக்கின்றது.

### "சங்கநாதம்"

(சா. கி.)

சங்கம் வைத்து தமிழ்வளர்த்த நாட்டிலே
சக்தி யோடு சங்கநாதம் செய்குது
தூய்மை யோடு வாழ நாம்
"துறவி" துடி துடித்து கிளம்புது
போற் றுவோம் அதை வாழ்த்துவோம்
வாழி வாழி யென்று நாம்.

### சங்கந்தியில்

# திருப்பாவை திருவெம்பாவை மாநாடு.

16—1—55-மாலை 3-மணிக்கு சக்கந்தி ஸ்ரீ P. முருகையா முதலியார் இல்லத்தில், அருட்டிரு. குக. சதாசிவ அடிகளார் அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு எடையூர் பள்ளித் தலைமையாசிரியர் திரு. S. சீதாராமன் அவர்களால் "குழந்தைகளும்-பக்தியும்" என்பது பற்றி விரிவாகப் பேசப்பட்டது. தலைவர் அவர்களால் ஸ்ரீ ஆண்டாள் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் பற்றியும், திருப்பாவை திருவெம்பாவையை ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றியும் வெகு அழகாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தார்கள். 5-வயதுமுதல் 13-வயது வரையில் உள்ள மாணவ மாணவிகளால் திருப்பாவை பாராயணம் செய்யப்பட்டு தலைவர் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டது இன்னும் சிலரால் தேவாரம் திருப்புகழ் கீர்த்தனைகளும் பாடப்பட்டது கிராமவாசிகளனைவரும் கூடியிருந்து விழாவை சிறப்புற நடத்திவைத்தனர். சங்கந்தி கணேச பிள்ளை குழுவினரால் நாதசுரக் கச்சேரி நடைபெற்றது. ஸ்ரீ R. சுப்பையாசெட்டியார் அவர்கள் இம்மாநாட்டிற்குப்பெரிதும் முயற்சிஎடுத்துக்கொண்ட ஸ்ரீ P. முருகையா முதலியாருக்கு நன்றி கூற கூட்டம் இரவு 9-மணிக்கு முடிவுற்றது.

### குறிப்பு.

*"துறவி" என்னும் திங்களிதழில் வெளியிட கட்டுரை எழுதியனுப்பும் துறவிகள் நல்ல கடிதத்தில் தொடர்பு எழுத்தில்லாமல் எழுத்துக்களை நன்கு தெரிந்துகொள்ளும்படி தனித்தனியாக ஒவ்வொரு கடிதத்திலும் ஒரேபக்கத்தில் எழுதி ஒவ்வொரு தமிழ் மாதம் 15உக்குள் அனுப்பிவைக்கும்படிவேண்டுகின்றோம் ...*

---

அச்சுரிமை: ந. வேணுகோபாலன் ஸ்ரீ ஜயலக்ஷ்மி பிரஸ், திருவண்ணாமலை

ஆசிரியரும், வெளியிடுபவரும்: சுவாமி சொருபானந்தா, கீழ்ப்பாலூர்.